# சியம்பலாண்டுவ பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூலை 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, சியம்பலாண்டுவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சியம்பலாண்டுவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மொனராகலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட எல்-2128 ஆம் இலக்க வழக்கிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தவேண்டிய சட்டத்தரணிக் கட்டணமான ரூபா 15,000 இற்காக கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 இல் மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 02 வீதிகளுக்கு கொங்கிரீட் துண்டுக்கற்கள் இடும் வேலைக்கு ரூபா 1,000,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அங்கிகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வீதியைத் திருத்த வேண்டிய 32.4 சதுர மீற்றர் திருத்தஞ் செய்யப்படாதிருந்தமை 2012 நவம்பர் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 124 பீ திஸ்ஸபுர, 217 நிவாச வீதி மீளமைக்கும் போது கொங்கிரீட் துண்டுக்கற்கள் 30 மீற்றர் அளவில் இடையே ஆற்றுமணல் இடப்படாதிருந்ததுடன் முழுப் பகுதியும் உரிய செப்பனிடுகை இயந்திரத்தினால் செப்பனிடப்படாதிருந்தமை 2012 நவம்பர் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிக்காக ரூபா 29,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012 இல் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதிகஸ் எல்ல எலேலந்த வீதியில் கொங்கிரீட் கல் பதித்தல் கட்டம் VI மற்றும் VII இற்காக ஒப்பந்தச் சங்கத்திற்கு ரூபா 996,316 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

ரூபா 500,000 நிதியேற்பாட்டிற்காக அண்ணளவாக பதிக்கப்பட வேண்டிய 10,100 கொங்கிரீட் துண்டுக் கற்களுக்காக வீதியின் VI மற்றும் VII கட்டத்தின் கீழ் 9,500 கொங்கிரீட் கற்கள் படி பதிக்கப்பட்டிருந்தது. 2013 யூலை மாதம் 23 ஆந் திகதி வீயின் VI மற்றும் VII ஆம் கட்டங்களின் பரிசோதனையின் போது வீதிச் செப்பனிடுகை உரிய பிரகாரம் செப்பனிடப்படாமல் கொங்கிரீட் துண்டுக் கற்கள் இடப்பட்டமையினால் வீதியில் இடையிடையே உள்ள இடங்களில் மேடுபள்ளமாகவும் வீதியின் இரு மருங்கிலும் கூறப்பட்ட பிரகாரம் கிரவல் இட்டு செப்பனிடப்படாதிருந்தமையும் சில இடங்களில் வீதியின் இரு பக்கத்திலும் துண்டுக்கற்கள் கழன்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) சியம்பலாண்டுவ பிரதேச சபை அலுவலகத்தின் முன்பக்கப் பகுதியை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட நாட்கூலி தவிர்த்து ரூபா 264,733 பெறுமதியான மதிப்பீடு மற்றும் பொருள் மதிப்பீடு தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 ஏப்ரல் மாதத்தில் நேர்க்கூலி

அமுல்படுத்தவதற்காக ரூபா 1,467,000 நிதியேற்பாட்டுத் தொகையில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 1,119,109 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுப்பசளை உற்பத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் நிர்மாணிக்கப்பட்ட குறிப்பிட்ட கட்டிடம், களஞ்சிய அறை மற்றும் கிணறு என்பன அழுக்கடைந்திருந்த கட்டிடத்தின் யன்னல்களின் கண்ணாடிகளும் உடைந்திருந்தன.

(ஆ) இச் செயற்திட்டத்திற்கான 12´ பொலிதீன் சீலர் ஒன்றுக்காக ரூபா 3,510 தொகை 2009 ஆம் ஆண்டின் போதும், 500 பொலிதீன் பைகளுக்காக ரூபா 10,000 தொகை 2010 ஆம் ஆண்டின் போதும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை மாதம் 23 ஆந் திகதிவரையிலும் இப்பொருட்கள் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) இச் செயற்திட்டத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்டு ஏனைய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட ரூபா 78,126 பெறுமதியான 15 வகையான உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 3X2 ½¶ இரும்பு மேசை, பிளாஸ்டிக் கதிரை, வெள்ளைப் பலகை மற்றும் 07 கழிவுப் பொருள் வாளிகள் என்பன செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்படாது அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 1,119,109 தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப்பசளை உற்பத்திச் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமல் சியம்பலாண்டுவ மற்றும் தொம்பகஹவெல நகரங்களிலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் கூட்டுப்பசளைத் தளத்திற்கு அருகிலுள்ள குழியொன்றில் முறையற்ற பிரகாரமும் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் போடப்பட்டிருந்தன.